பக்கங்கள்:12 | விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 19 சனிக்கிழமை 02.04.2022 கதிர் 148

**இனி இது ரகசியம் அல்ல!**

வேகமாக பரவுவது வதந்'தீ'! தீயை விட பற்றிப் பரவும் வேகம் அதிகம். அதுவும் நமது சமூக ஊடகங்களின் ஊக்கத்தில் இரட்டை வேகம் கட்டி அது உலக ளாவக் கணப் பொழுதில் பரவும்.

நேற்று முன்தினம் மிரிஹானாவில் ஜனாதிபதியின் ☞2

# அமைச்சரவையைக் கலைத்து காபந்து அரசை அமைக்கவும்!

## கோட்டாவிடம் 11 பங்காளிக் கட்சிகள் அவசரக் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 02

காபந்து அரசொன்றை அமைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அவசர கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆளுந்தரப்பைச் சேர்ந்த 11 கட்சிகளின் கூட்டமைப்பால் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. ☞2

## அமைச்சுப் பதவிகளை உடன் துறந்து அரசிலிருந்து வெளியேற சு.க. முடிவு!

### மைத்திரி தலைமையிலான கூட்டத்தில் அதிரடித் தீர்மானம்



நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகளை உள்ளடக்கி இடைக்கால அரசு அமைக்கப்படாவிட்டால், அமைச்சுப் பதவிகளைத் துறந்து அரசிலிருந்து வெளியேறுவோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை தொடக்கம் ☞11

## அரசு தோல்வி!

### ரணில் சுட்டிக்காட்டு



மக்களின் அமைதிப் போராட்டங்கள் வன்முறையாக உருவெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், மக்களின் பிரச்சினைகளுக்குச் செவிசாய்த்து அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் அரசு தோல்வியைச் ☞2

**ஜனாதிபதி இல்லம் சுற்றிவளைப்புப் போராட்டம்;**

## எஸ்.ரி.எவ். 24 பேர் உட்பட 37 பேர் கொழும்பு வைத்தியசாலையில்!

மிரிஹான பகுதியில் ஜனாதிபதி இல்லத்தைச் சுற்றிவளைத்து மக்கள் முன்னெடுத்த போராட்டத்தின்போதும், அதன்பின்னர் ஏற்பட்ட சம்பவங்களிலும் காயமடைந்த 37 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ☞11

## தொடரும் மக்கள் போராட்டம்; மேல் மாகாணத்தில் ஊரடங்கு

### இன்று காலை 6 மணிக்குத் தளர்வு



நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு மற்றும் வாழ்க்கைச் செலவினம் அதிகரிப்பு உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஜனாதிபதி தலைமையிலான அரசைப் பதவி விலகுமாறு கோரியும் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ☞11

## விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்துடன் கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் நாமே

### சுமந்திரனின் கருத்துக்கு ரெலோ பதில்



விடுதலைப்புலிகளின் ஆசீர்வாதத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் நாமே. விடுதலைப் புலிகளை வன்முறையாளர்கள் போல் காட்டிக் கொள்ளும் சுமந் திரன், தமிழ்த் தேசியக் ☞11

## அவசரகாலச் சட்டம் பிரகடனம்

அதிசிறப்பு வர்த்தமானியொன்றின் மூலம் நேற்று முதலாம்திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலைக்கு அமைய பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் மக்களுக்கான ☞11

**யாழில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் குழப்பம்**

## கோட்டாபயவுக்கு ஆதரவு தெரிவித்த அருண் சித்தார்த்தனுக்குச் செருப்படி



(இ.கலையமுதன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் அரசின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் குழப்பம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தப் பேரணி யாழ். மாவட்ட செயலகத்தில் இருந்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை வந்தடைந்த இறுதி நேரத்தில், அங்கு ஜனாதிபதி கோட்டாபய ☞2

EDUS Online School with GLOBAL STANDARDS
சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!
English & Tamil Medium
அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.
தரம் 1-5 (Primary) | தரம் 6-11 (Secondary) | G.C.E A/L
Enroll Now
Admissions
www.edus.lk
0777 123 330
அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உத்தியோகபூர்வ இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் பஸ்ஸுக்கு வைத்த தீயிலும் விட வேகமாக வதந்'தீ'யும் பரவியது.

மிரிஹானா சம்பவத்தை அடுத்து இலங்கை அரசுக்கு உதவுவதற்காக இந்தியப் படைகள் கொழும்பு விரைவதான கட்டுக்கதைதான் அந்த வதந்தி. எந்தப் படைத் தளத்திலிருந்து, எந்தப் படைப் பிரிவை சேர்ந்த, எத்தனை வீரர்கள் அவசர அவசரமாக கொழும்பு வருகின்றார்கள் என்பது வரை துல்லியமான தகவல்களுடன் கதை அளந்து இருக்கிறார் அந்த மூல செய்தியை – புளுகு மூடையை – முதலில் அவிழ்த்து விட்ட அந்தப் பிரகிருதி. அவ்வளவுதான். காட்டுத்தீயாகப் பரவியது அந்த கட்டுக்கதை. வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் டசினுக்குக் குறையாதோர் நேற்று மாலை என்னுடன் தொடர்பு கொண்டு அது உண்மையா என்று கேட்குமளவுக்கு செய்தி 'விதைப்பு' வெற்றிகரமாக அரங்கேறியிருக்கிறது. இப்படி செய்தி பரப்புவோர் குறித்து சீற்றத்துடன் மறுப்பறிக்கை கொடுக்கும் நிலைமைக்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தள்ளப்பட்டிருக்கின்றது என்றால், வதந்தி பரப்புவோரின் திறமைதான் என்னே...!

தூதரகத்தின் மறுப்பு பின்வருமாறு அமைந்தது:–

"இலங்கைக்கு இந்தியா தனது படைகளை அனுப்புவதாக சில ஊடகங்களில் வெளியாகியிருக்கும் அப்பட்டமான பொய்யானதும் முற்றிலும் ஆதாரமற்றதுமான செய்திகளை தூதரகம் உறுதியாக நிராகரிக்கின்றது.

"இவ்வாறான பொறுப்புணர்வற்ற செய்தியிடலை தூதரகம் கண்டிக்கும் அதேநேரம், சம்பந்தப்பட்ட தரப்பினர் வதந்திகளைப் பரப்புவதை தவிர்க்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றது." – என்று அமைந்தது.

★ ★ ★

நேற்று யாழ். பஸ் நிலையத்தில் இடம்பெற்ற 'செருப்பார்ச்சனை' சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவியது.

அந்த சித்தார்த்தனுக்கு போதி மரத்தின் கீழ் ஞானம் பிறந்தது. இந்த சித்தார்த்தனுக்கு யாழ். பஸ் நிலைய செருப்பார்ச்சனையால் அது பிறந்திருக்குமானால் நல்லது.

அதுதான் நேற்று தமிழ் வட்டாரங்களில் பிரதான பேசுபொருளாக – ட்ரெண்டாக – இருந்தது. யாழ். நகரில் ஹிருணிகா பிரேமச்சந்திரா எம்.பி. முன்னெடுத்த போராட்டத்தின்போதுதான் இந்தத் துணிச்சலான சம்பவம் நடைபெற்றது.

ஹிருணிகா பிரேமச்சந்திரா என்றதும் ஒரு விடயத்தை சுட்ட வேண்டும் என்ற நினைவு வந்தது.

1948க்குப் பின்னர் – நாடு சுதந்திரம் அடைந்த பின்பு – நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த போராட்டங்கள் எவையும் நாட்டின் அரச தலைவரின் இல்லம் அல்லது உத்தியோகபூர்வ அலுவலகம் போன்றவற்றை நோக்கி நடத்தப்பட்டவை அல்ல.

2003இல் நாட்டின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டில் இருந்த போது அவருக்குத் தெரியாமல் சில அமைச்சர்களைத் தம்பாட்டில் பணி நீக்கி, அப்போது எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்திருந்த தனது சுதந்திர கட்சியை சேர்ந்த சில எம்.பிக்களை அந்த இடத்திற்கு அமைச்சர்களாக நியமித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்காவில் வந்திறங்கிய போது அவருக்கு ஆதரவு தெரிவித்து பல்லாயிரம் மக்கள், ஆதரவாளர்கள் பெரும் ஜன சமுத்திரமாகத் திரண்டனர். கொழும்பு வரை பெரும் மக்கள் வெள்ளம். மக்கள் பேரெழுச்சி. அத்தனை லட்சம் பேருடன் ஊர்வலமாக ஜனாதிபதி மாளிகைக்குள் புகுவோம் என்று உணர்ச்சிவசப்பட்டு நின்றனர் ஐ.தே.கவினர். ஆனால் தடுத்து விட்டார் பிரதமர் ரணில். ஜனாதிபதி சந்திரிக்காவுடன் நேரடியாக மோதும் அரசியல் முதுகுத் துணிவு ரணிலுக்கு இருக்கவில்லை.

நேற்று முன்தினம் இரவு மிரிஹானவில் கோட்டாவின் இல்லத்தை நோக்கி ஆர்ப்பாட்டம் செய்யும் துணிவு மக்களுக்கு வந்தது என்றால், அதற்கு அத்திவாரம் போட்டு, தைரியத்தை வரவழைத்துக்கொடுத்த துணிச்சலான வீராங்கனை ஹிருணிகா பிரேமச்சந்திராதான்.

இராணுவ எதேச்சாதிகாரப் போக்குடைய கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்னால் முதல் தடவையாகத் திடுதிப்பென பல்லாயிரம் பெண்களுடன் துணிச்சலாக போய் அமர்ந்து, வாய் வீரம் காட்டி, சண்டப்பிரசண்டம் பண்ணிய அவரைப் பார்த்துதான் இப்போது ஏனையோருக்கும் தைரியம் பிறந்திருக்கின்றது – அங்கு போய் பிரளயம் பண்ணுவதற்கு.

அதே சமயம் கடந்த 15 ஆம் திகதி கொழும்பு நகரில் எதிர்க்கட்சியினரைப் போராட்டத்திற்கு அழைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ துணிச்சலுடன் தமது ஆர்ப்பாட்டக்காரர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நகர்த்தியமை மெச்சப்படும் விடயமாக தென்னிலங்கை விமர்சகர்களால் நோக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மிரிஹானாவில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் விமர்சகர்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆரம்பத்திலிருந்தே ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் பாதுகாப்பு தரப்பு மிகுந்த மெத்தனம் காட்டியதாம். மேலிடத்திலிருந்து கடும் அழுத்தம் – நெருக்குவாரம் – தீவிரமாக வந்தபின்னர் பெயரளவில் பல வந்தம் போராட்டக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. அதாவது, போராட்டக்காரர்களை அப்புறப்படுத்துவதில் பாதுகாப்புத் தரப்பின் கீழ் மட்டத்தவர்கள் முழு மனதுடன் – முழு முனைப்புடன் – ஈடுபாடு காட்டவில்லை.

இந்த விவகாரம் மேல்மட்டம் வரை புரிந்து கொள்ளப்பட்டிருப்பதால் நிலைமையின் விபரீதத்தை அவர்களும் நன்கு அறிந்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் பதுளையில் நடைபெறவிருந்த பொது நிகழ்ச்சி ஒன்றை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ புலனாய்வுத் தகவல்களை அடுத்து ரத்துச் செய்து விட்டார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் துணைவியார் நுவரெலியாவில் நேற்றுத் தாம் கலந்து கொள்ளவிருந்த நிகழ்வில் பங்கு கொள்ள முடியாத நிலைமையில் அதனை தவிர்த்து விட்டார். நேற்று எம்பிலிப்பிட்டியவில் நடக்கவிருந்த பொது நிகழ்வை அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ புறக்கணிக்கும் கட்டாயம். அவரது இடத்துக்கு அங்கு சென்ற அரசு ஆதரவு போக்குடைய சு.கவின் எம்.பியான சாமர சம்பத்தை மக்கள் கூக்குரலிட்டு அடிக்காத குறையாகக் கலைத்து விட்டனர். முன்னாள் ஊவா முதலமைச்சரான அவர், 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடித் தப்பி வந்து, தமக்கு நேர்ந்த கதியை தமது கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விவரித்தார்.

அரசும் ஆட்சித் தரப்பும் என்ன சொன்னாலும், ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் பொது நிகழ்வுகளுக்காக வெளியே தலை காட்டுவது கூட நெருக்கடியாக மாறியிருக்கின்றது.

'எப்படியிருந்த ராஜபக்ஷக்கள் சாம்ராஜ்யம் இப்படி ஆகிவிட்டதே?'

ஐயோ பாவம்...!

–மின்னல் –

---

## கோட்டாபயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அருண் சித்தார்த்தன் தலைமையிலான குழுவினர் குரல் எழுப்பிய வேளை முறுகல் நிலை உருவானது. அதன்பின்னர் கைகலப்பும் உருவானது.

இதன்போது அருண் சித்தார்த்தனையும், அவரின் குழுவினரையும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைத்து செருப்பால் அடித்துத் தாக்கினர்.

பதற்றத்தைத் தணிப்பதற்காகப் பொலிஸார் இறக்கப்பட்டு அப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. இந்தக் கைகலப்பில் சிலர் காயமடைந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் கட்சியினர் தொடர்ந்தும் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தமையுடன் குழப்பவாதிகளுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர்.

குழப்பத்தில் ஈடுபட்ட அருண் சித்தார்த்தன் தலைமையிலான குழுவினரைப் பொலிஸார் அங்கிருந்து பாதுகாப்பாக ஓட்டோவில் அனுப்புவதற்கு முயற்சித்த வேளை போராட்டக்காரர்கள் ஓட்டோவையும் முற்றுகையிட்டனர். பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் பொலிஸார் ஓட்டோவை அங்கிருந்து அனுப்பிவைத்தனர்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஹிருணிகா பிரேமச்சந்திரா எம்.பி., உமாச்சந்திரா பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

---

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகமாக உயர்ந்துள்ளன. அதேவேளை, எரிபொருள் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இதனால் ஒரு நாளில் பல மணித்தியாலங்கள் மின்சாரத் தடையும் ஏற்படுகின்றது. இதன் காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும், அவரைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியும் மக்கள் பல்வேறு இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தற்போதைய அமைச்சரவையைக் கலைத்து, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய காபந்து அரசொன்றை அமைக்குமாறு ஆளுந்தரப்பைச் சேர்ந்த 11 கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

## அரசு தோல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சந்தித்துள்ளது என்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் விளக்கமளித்து அவர் நேற்றுவெளியிட்டுள்ள அறிவித்தலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் அரசு தோல்வியடைந்துள்ளது. எதிர்க்கட்சியும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

அமைதிப் போராட்டங்களில் எந்தவொரு நபருக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது. அதேபோன்று வன்முறைக்கும் இடமளிக்கக்கூடாது. மக்களின் போராட்டங்களில் அரசியல் கட்சிகள் பங்குப்பற்றக்கூடாது.

காலம் கைமீறிப் போயிருந்தாலும் தற்போது நாடாளுமன்றத்துக்கும் பொறுப்பு இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இது தொடர்பில் பேசப்பட வேண்டும்.

எமது பிரச்சினைகளை வன்முறைகளின்றி நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் – என்றுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622










கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சருகுப் புலிகளின் புலிக் கவசம்!

**எந்த அரசியல் பிரச்சினை – நெருக்கடி – வந்தாலும் விடுதலைப் புலிகளின் பெயருக்கும், சித்தாந்தங்களுக்கும், தியாகத்துக்கும் பின்னால் போய் ஒளிந்து கொள்ளும் – அல்லது புலிகள் தொடர்பில் தமிழ் மக்களின் மனதில் இருக்கும் நற்பெயரைத் தங்கள் அரசியல் கீழ்மைத்தனங்களை உருமறைப்பு செய்யும் காப்பரணாகப் பயன்படுத்திக் கொள்ளும் – பண்பியல்பு நம் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு தொற்று நோயாக நீடிக்கின்றது.**

**தாம் அரசியலுக்குள் நுழைந்த போது, ஆயுதம் தாங்கி அரசியல் போராட்டங்களை நடத்திய முன்னாள் போராளிகள் குழுக்களை ஏறெடுத்தும் பார்க்கேன் என்ற உறுதியுடன் வந்த ஒய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனில் இருந்து, பௌத்த, சிங்களப் பேரினவாதக் கட்சியான சுதந்திரக் கட்சியில் களமிறங்கி, விடுதலைப் புலிகளின் பாட்டை தனது பிரசார மேடைகளில் ஒலிக்க விட்ட அங்கஜன் இராமநாதன் வரை, இதற்கு விதிவிலக்கல்லர்.**

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்ற ஓரிருவர்தான் ஆரம்பம் முதல் விடுதலைப் புலிகள் விடயத்தில் தாங்கள் அவர்களுடன் வெளிப்படையாகவே முரண்பாடு உடையவர்கள் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி, இன்று வரை அதையே பிரதிபலித்து அரசியல் செய்பவர்கள்.**

**2009 மேயில் விடுதலைப் புலிகள் இயக்கம் செயலிழக்கும் வரை அவர்களைத் திட்டித் தீர்த்துத் தூற்றி அரசியல் நடத்திய ஆனந்தசங்கரி கூட, இப்போது தமிழரசையும், தமிழ் கூட்டமைப்பையும் வைவதற்காகவும், தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டும் நப்பாசையாகவும், புலிகளைத் தாழ்த்திப் பேசுவதைத் தவிர்த்தே வருகின்றார்.**

**ஆனால் தாம் அரசியலுக்குள் நுழைந்த இந்தப் பன்னிரண்டு ஆண்டு காலமாக விடுதலைப் புலிகள் தொடர்பாக ஒரே நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வரும் இன்னொருவரும் இருக்கிறார். அவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்ஏ.சுமந்திரன் எம்.பி.**

**விடுதலைப் புலிகளை முன்னிறுத்தி, அவர்களின் தியாகத்தை தனக்கான அரசியல் பிரசாரத் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி, அவர் செயல்படவில்லை. புலிகள் தொடர்பில் அவரின் நிலைப்பாடு தெளிவானது. விடுதலைப் புலிகளினது மட்டுமல்ல, எந்த ஆயுதக் குழு மற்றும் போராளிகள் அமைப்பினரதும் ஆயுதப் போராட்டத்தையும் அவர் ஏற்று அங்கீகரிக்கவில்லை. அத்தகைய தமது நிலைப்பாட்டைக் கூறுவதற்கும் – வெளிப்படுத்துவதற்கும் – அவர் பின்நின்றவரும் அல்லர். அப்படிக் கூறுவதற்கு அவருக்கு உரிமையுண்டு.**

**அந்த ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அதை மலினப்படுத்தி கெடுக்கும் விதத்திலோ, அந்தப் போராட்டம் முடிவுற்ற போது அதனை முன்னெடுத்த வீர மறவர்களின் வீரம் மற்றும் தியாகங்களை கொச்சைப்படுத்தும் விதத்திலோ அவர் ஒருபோதும் கருத்து வெளியிட்டவரோ அல்லது செயற்பட்டவரோ அல்லர். மாறாக, நான் விடுதலைப் போராளிகளின் ஆயுதப் போராட்டத்தை ஏற்று அங்கீகரிக்க விட்டாலும், தமிழர் தேசத்தின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த அளப்பரிய தியாகங்களையும் ஒப்பற்ற ஈகங்களையும் மனதார மெச்சி மதிக்கிறேன் என்று வெளிப்படையாகக் கூறி வருபவர் சுமந்திரன்.**

**தாங்கள் தொடர்ந்து அரசியலில் நிலைப்பதற்கு, விடுதலைப் புலிகள் போட்ட நிபந்தனைகளுக்கு வேறு வழியில்லாமல் அடிபணிந்து, புலிகளுடன் 'டீல்' போடும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டவர்கள் – ஆயுதங்களை வைத்திருந்தும் புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாது என்ற யதார்த்தப் புறநிலைக் கட்டாயத்தில், வேறு வழியின்றி புலிகளின் ஆயுதங்களுக்கு முன்னால் மண்டியிட்டு, அடங்கி அரசியல் செய்தவர்கள் – புலிகள் இயக்கம் அழிவதை 'அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்' என்று மகிழ்ச்சி ஆவலோடு காத்திருந்தவர்கள் – இப்போதும் சுமந்திரனின் அரசியலோடு மோதுவதற்கு வேறுவழியின்றி புலிப் புராணம் பாடி, அவர்களின் தியாகத்துக்கு பின்னால் போய் ஒளிந்து அரசியல் செய்ய முனைகிறார்கள் – தாம் முன்னர் ஆற்றிய ஒட்டுக்குழு சதி நடவடிக்கைகளை மறந்து!**

# நீர்த்தேக்கங்கள் வற்றியமையே மின் துண்டிப்புக்குக் காரணம்!

## பவித்ரா இப்படி விளக்கம்

நாட்டில் நீரேந்தும் பிரதேசங்களில் உள்ள நீர்த்தேக்கங்கள் வற்றியதன் காரணமாகவே மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் இருக்கும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

கடந்த காலத்தில் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி கிடைத்ததன் காரணமாக 50 வீதமான மின்சாரம் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாகவே விநியோகிக்கப்பட்டன.

சாதாரணமாக மழைவீழ்ச்சி இல்லாத காலத்தில் இப்படியான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவது வழக்கம். நிலைமை இந்தளவுக்கு உச்சமடைவதற்கு முன்னர், சில நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அவை நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்போ அல்லது நாடாளுமன்றமாகவோ இருக்கலாம். அல்லது நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையாக இருக்கலாம்.

தற்போது இலங்கை மின்சார சபை சுமார் 125 இடங்களுக்கு மின்சாரத்தை துண்டிப்பதில்லை. நேற்று வரை அந்த நிலைமை காணப்பட்டது. துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற 24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்க வேண்டிய நிறுவனங்கள் குறிப்பாக வைத்தியசாலைகள், தொழிற்பேட்டைகளுக்கு மின்சாரம் தடையின்றி வழங்கப்படும்.

அப்போது, அந்த மின் இணைப்பு கட்டமைப்புடன் சம்பந்தப்பட்டுள்ள வீடுகள், இடங்களுக்கு மின்சாரம் கிடைக்கும். அப்படியான இடங்களுக்குச் சென்று மின் துண்டிப்பை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன் எனவும் பவித்ரா வன்னியராச்சி கூறியுள்ளார்.

# பிரான்ஸ் - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச்சங்க பிரதிநிதிகள் விஜயம்



பிரான்ஸ் – இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவரும் பிரான்ஸ் நாடாளுமன்ற செனட் உறுப்பினருமான ஜெஷாஎல் கெரியோ உள்ளிட்ட பிரான்ஸ் – இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச்சங்க பிரதிநிதிகள் சிலர் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அண்மையில் விஜயம் செய்தனர்.

நட்புறவுச்சங்கத்தின் பிரதித் தலைவி செனட் உறுப்பினர் அனிக் ஜக்மன்ட், சங்கத்தின் உறுப்பினர் அலன் ஹூபர் மற்றும் சங்கத்தின் நிறைவேற்று செயலாளர் திருமதி ஏன் லோரா உள்ளிட்டோர் இதன்போது கலந்துகொண்டனர்.

பிரதிநிதிகள் சபாநாயகரின் கலரியிலிருந்து நாடாளுமன்ற அமர்வைப் பார்வையிட்டமையுடன், இதன்போது தலைமை ஆசனத்திலிருந்த குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் பிரான்ஸ் பிரதிநிதிகளை வரவேற்று சபையில் விசேட அறிவிப்பை மேற்கொண்டார்.

அதனையடுத்து, இரு நாட்டு நாடாளுமன்ற நட்புறவுச் சங்கங்களுக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இங்கு பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், ஏழு தசாப்தங்களாக இலங்கை மற்றும் பிரான்ஸ் இடையில் காணப்படும் வலுவான தொடர்புகளை இருநாட்டு நாடாளுமன்ற நட்புறவுச் சங்கங்கள் ஊடாக மேலும் மேம்படுத்த எதிர்பார்க்கிறேன் என தெரிவித்தார். அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவரகம் மூலம் இலங் கைக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்கு வது தொடர்பிலும் அவர் நன்றிகளைத் தெரி வித்தார்.

பிரான்ஸ் – இலங்கை நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் தலைவரும் பிரான்ஸ் நாடாளுமன்ற செனட் உறுப்பினருமான ஜெஷாஎல் கெரியோ குறிப்பிடுகையில், பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் பல்வேறு துறைகளில் காணப்படும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த எதிர்பார்க்கிறேன் எனவும், இலங்கையின் அபிவிருத்திக்குத் தொடர்ந்தும் பங்களிப்பு செய்வேன் எனவும் தெரிவித்தார்.

இலங்கை சபாநாயகர் உள்ளிட்ட தூதுக் குழுவினருக்கு பிரான்ஸ் வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவரத்து, இலங்கை – பிரான்ஸ் நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் இசுறு தொடங்கொட, இராஜாங்க அமைச்சர் தாரக பலசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி. அலவதுவல, யதாமினி குணவர்தன, கீதா குமாரசிங்க, டயனா கமகே, அரவிந்த குமார், ஹெக்டர் அப்புஹாமி, கோகிலா குணவர்தன, மேஜர் சுதர்ஷன தெனிபிடிய, வசந்த யாப்பா பண்டார, பிரேம்நாத் சி.தொலவத்த, மதுர விதானகே மற்றும் நாடாளுமன்ற பணியாள்கள் தொகுதியின் தலைவரும் பிரதிச் செயலாளர்நாயகமுமான குஷானி ரோஹனத்தீர ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# திறைசேரியிடம் பணமில்லை இருக்கும் வளங்கள் சிக்கனம்!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா 'அட்வைஸ்'

குறைபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இருக்கும் வளங்களைக் கூடியளவில் பயன்படுத்தி சேவையாற்றுவதற்கு சகல அரச ஊழியர்களும் தற்போது அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொழில் திணைக்களத்தில் நடைபெற்ற பிரதேச தொழில் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பிரதேச அலுவலகங்களில் உள்ள குறைபாடுகளைத் தீர்த்து வைக்கும் பலம் தற்போது எம்மிடம் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் மிகப்பெரிய பிரச்சினையில் சிக்கியுள்ளனர். மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பித்துள்ளது. மக்கள் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்த நாளை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் என்பதை புரிந்துகொள்ள முடியாமல் மக் கள் உள்ளனர். இதனால், துரிதமாக நாம் இந்த நிலைமையை முகாமைத்துவம் செய்ய வேண்டும்.

நாம் எம்மிடம் இருக்கும் வளத்தைப் போதுமான அளவில் பயன்படுத்தி வேலை செய்ய வேண்டும். பல்வேறு பரீட்சைகளில் தேர்வுசெய்யப்பட்டவர்களைத் தவிர புதிதாக எந்த வெற்றிடங்களையும் நிரப்பும்



இயலுமை தற்போது எமக்கில்லை.

திறைசேரியில் அதற்கான பணம் இல்லை. இதனால், நாம் முடிந்தளவில் சிக்கனமாகச் செயற்படுவோம் என கோரிக்கை விடுக்கின்றேன் எனவும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



# 24 மணிநேர மின்வெட்டு ஏப்.15 வரை இருக்கும்!

## சம்பிக்க எச்சரிக்கை

ஏப்ரல் 15 ஆம் திகதி வரை 24 மணிநேர மின்வெட்டு ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள முறைசாரா நடைமுறைகள் தொடருமானால் இவ்வாறான நெருக்கடி நிலை ஏற்படும் என சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சரிபார்க்கப்படாத நடைமுறைகளை எதிர்கொண்டால் முழு தேசிய மின்வட்டமும் வீழ்ச்சியடையக்கூடும்.

மருந்து, உணவு, எரிவாயு மற்றும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# 2021ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. சாதாரணதர மாணவர்களின் பரீட்சையை பிற்போடக்கூடாது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

நாட்டில் தற்போதுள்ள கடுமையான சூழல் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதை எவரும் கூறமுடியாதவர்களாக உள்ளனர். நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக்கொண்டே போகின்றது.

2022 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பில் இணையும் மாணவர்கள் மூன்று மாதங்கள் கடந்த நிலையில் வீட்டில் உள்ளனர். அவர்களை ஏப்ரல் முதல் வாரத்தில் பாடசாலைகளில் அனுமதித்தே ஆகவேண்டும்.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் கல்வியாண்டு நிறைவடைந்து பரீட்சை நடைபெறாத சூழலால் பாடசாலைகளில் பல்வேறு நெருக்கடிகள் உருவாகியுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு அந்த மாணவர்கள் விரைவாக உயர்தர வகுப்புகளில் இணைவதற்கு வசதியாக க.பொ.த.சாதாரணதர பரீட்சை நடைபெற்றே ஆக வேண்டும்.

இதனை எக்காரணம் கொண்டும் பிற்போட இடமளிக்க முடியாதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளதோடு, நெருக்கடியான காலம் இன்னும் வலுவடைந்து மாணவர்கள் கற்றதை மறந்து ஆசிரியர்களை உதாசீனம் செய்யும் நிலை உருவாகாமல் இருக்க, பரீட்சை குறித்த காலத்தில் நடத்தப்பட வேண்டும் என சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறக்குமதியாகும் பெரியவெங்காயம் 100 ரூபாவினால் விலை அதிகரிப்பு!

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலையை 100 ரூபாவால் அதிகரிக்க தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

110 ரூபாவாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 210 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் இந்த திடீர் விலை அதிகரிப்பு நியாயமற்றது என மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நுவரெலியாவுக்குச் சென்ற பதுளை யுவதியைக் காணோம்



பதுளை பகுதியைச் சேர்ந்த யுவதியொருவர் நுவரெலியா – றாகலை பகுதிக்குச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்ற நிலையிலேயே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 07ஆம் திகதி காலை முதல் அவர் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

20 வயதான கணேசமூர்த்தி காயத்திரி (நித்யா) என்ற யுவதியே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என அவரது சகோதரியான கணேசமூர்த்தி துர்கா தெரிவித்தார்.

மேற்படி யுவதி காணாமல் போன சம்பவம் தொடர்பில் றாகலை பொலிஸ் நிலையத்தில் கடந்த 7ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், இதுவரை பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என அவரது சகோதரி கூறுகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என றாகலை பொலிஸார் தெரிவிக்கின்ற நிலையில், கணேசமூர்த்தி காயத்திரி தொடர்பான தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில், 0776320266 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறு அவரது உறவினர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# வவுனியாவில் காணாமல் போன இளைஞன்; மேலதிக விசாரணைகள் முன்னெடுப்பு

வவுனியாவில் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி முதல் காணாமல்போன இளைஞன் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், இந்தச் சம்பவம் தொடர்பாக சில சந்தேக நபர்கள் மற்றும் அவரது நண்பர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதம் 27 ஆம் திகதி வவுனியா குருமன்காட்டிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்ற பாலகிருஷ்ணன் நிரேஸ் என்ற இளைஞன் காணாமல் போயுள்ளார் என அவரது தாயாரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது . இதன் விசாரணைகள் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன எனவும் இதன் உண்மைத் தகவல்களை காணாமல் போன இளைஞனின் தாயார் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களின் முன் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்துக்கள் தொடர்பாகப் பொலிஸாரிடம் வினவியபோது –

மேற்படி வர்த்தக நிலையத்துக்கு முன்பாக இளைஞன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த காட்சிகள் சி.சி.ரி.வி. காணொலியில் தெளிவாகின்றது. எனினும் அந்த வர்த்தக நிலையத்துக்குள் சென்றமை காணப்படவில்லை . அப்படியே வெளியே சென்றமையையே காணமுடிகின்றது. அது தொடர்பாகத் தொடர்ந் தும் ஆராயப்பட்டு வருகின்றது.



அவரது நண்பர்கள் மற்றும் சந்தேக நபர்கள் சிலரிடம் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன . அவரது தொலைபேசி இலக்கம் மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பன கண்காணிக்கப்பட்டு வருகின்றன . இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என மேலும் தெரிவித்துள்ளனர்.

# மாற்றுவலுவுடையோ தொடர்பான உரிமைகள் அடிப்படை உரிமைகளில் அடங்க வேண்டும்

## சட்டத்தரணி லசந்தி தஸ்கோன் வலியுறுத்து

மாற்றுவலுவுடையோர் அரசியலில் அங்கம் வகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். தேர்தலுடன் தொடர்புடைய சகல பணிகளிலும் அவர்கள் பங்காற்றுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் தேர்தல் விவகாரங்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளரான சட்டத்தரணி லசந்தி தஸ்கோன் தெரிவித்துள்ளார்.

மாற்றுவலுவுடையோருக்கான சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பில் சி.பி.எம். நிறுவனம் ஏற்பாடு செய்த செயலமர்வு இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே, அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மாற்றுவலுவுடையோருக்கு அனுதாபம் காட்டுவதை விடுத்து அவர்களைத் தனியாகச் செயற்படுவதற்கு இடமளிப்பதே சிறந்தது.

இதேவேளை, அடிப்படை உரிமைகளில் மாற்றுவலுவுடையோரின் உரிமைகளை உட்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்திருக்கிறேன் எனவும் தேர்தல் விவகாரங்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளரான சட்டத்தரணி லசந்தி தஸ்கோன் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இணைய வசதிகள் முடக்கப்பட்டு கட்டுநாயக்க மூடப்படும் அபாயம்!

## அரசியல் மற்றும் பொருளாதார ஆய்வாளர் கருத்து

இலங்கையில் இன்னும் இரண்டு, மூன்று நாள்களில் இணைய வசதிகள் அனைத்தும் முடக்கப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையமும் மூடப்படும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது என பிரித்தானியாவில் இருக்கக்கூடிய அரசியல் மற்றும் பொருளாதார ஆய்வாளர் இதயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு நிதி நெருக்கடிக்கு மத்தியில் கையாளும் பல்வேறு தரப்பிலான உபாயங்கள் தொடர்பாக ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கை அரசை தற்போது இயற் கையும் தண்டிக்க கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது,தற்போது நீரினையும் சேமிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் 40 சதவீதமான மின்சார உற்பத்தியை செய்யக்கூடிய நிலையில் கூட இலங்கை இல்லை.

இந்த நிலைமை தொடரும் பட்சத்தில் இலங்கையில் தற்போது பயன்பாட்டிலுள்ள 3ஜி,4ஜி இணைய வசதிகள் கூட இன்னும் இரண்டு, மூன்று நாள்களில் முடங்கும் அபாயம் உள்ளது.

இதேவேளை,தற்போது அதிகளவு சுற்றுலா சென்றுள்ள புலம்பெயர் மக்கள் மீண்டும் தங்களது நாட்டுக்குத் திரும்ப முடியாத நிலையேற்பட்டுள்ளது.

மேலும், மின்வெட்டு பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை, ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத பிரச்சினை காரணமாக கட்டுநாயக்க விமான நிலையம் கூட மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# பேராதனை பல்கலை மாணவன் தற்கொலை

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் கற்கும் நான்காம் வருட மாணவன் ஒருவர் பல்கலைக்கழக விடுதிக்குள் உயிரை மாய்த்துக் கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை உயிரை மாய்த்துக் கொண்டவர் குருநாகல், மெல்சிறிபுர பகுதியைச் சேர்ந்த யு.ஜி.எஸ்.சசங்க என்ற வயது 25 மாணவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொறியியல் பீடத்தின் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை நடைபெற்று வருகிறது. உயிரிழந்த மாணவன் பரீட்சையின் இறுதித் நாள் பரீட்சையைத் தவிர ஏனையஅனைத்துபாடங்களுக்குமானபரீட்சைஎழுதியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இறுதிப் பரீட்சை வினாத் தாளில் அந்த மாணவன் விடையளிக்கத் தவறியஷ்மையையடுத்து, அவரது நண்பர்கள் அவரைத் தேடியபோது, அவரது கையடக்கத் தொலைபேசி செயலிழந்து காணப்பட்டுள்ளது.

இதன்போது விடுதியில் மாணவனைத் தேடும் போது அவர் தனது அறையினுள் தற்கொலை செய்துக் கொண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்என இரண்டுநண்பர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர். இது தொடர்பில் ஆராய்ந்த போது 'மன்னிக்கவும், இது யாருடைய தவறும் அல்ல. இந்த அழுத்தத்தை என்னால் தாங்க முடியாது' என மாணவன் எழுதிய கடிதமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்மலானைக்கான விமானசேவை பயணிகள் இன்மையால் நிறுத்தம்

சர்வதேச விமான நிலையமாக அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இலங்கையின் பழைமையான விமான நிலையமான இரத்மலானை விமான நிலையத்துக்கு மாலைதீவுக்கு சொந்தமான விமானம் முதலாவது பயணமாக பயணிகளுடன் தரையிறங்கியது.

விமானம் விமான நிலையத்தில் தரையிறங்கி, 96 மணி நேரங்கள் கடந்த பின்னரும் பயணிகள் எவரும் இல்லாத காரணத்தால், இரத்மலானைக்கான தனது சேவையை இடைநிறுத்தியுள்ளது.

கட்டுநாயக்க மற்றும் மத்தள ஆகிய இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் இருக்கும் நிலையில், மற்றுமொரு சர்வதேச விமான நிலையமாக இரத்மலானை திறந்து வைக்கப்பட்டது. அந்தத் திறப்பு விழாவுக்காக மாத்திரம் 60 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 27 ஆம் திகதி இரத்மலானை விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகத் திறந்து வைக்கப்பட்டதுடன் மாலைதீவின் மோல்டிவியன் விமான சேவையின் விமானம் மாலைதீவு பிரஜைகளை ஏற்றிக்கொண்டு முதலில் விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானமாகும்.

இந்தப் பயணிகளின் பின்னர் மாலைதீவில் இருந்து இரத்மலானைக்கோ, இரத்மலானையில் இருந்து மாலைதீவுக்கோ செல்ல பயணிகள் எவரும்இல்லாதகாரணத்தால், அந்த விமான சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி முதன்முறை ஆயிரம் ரூபா கடந்தது!

வரலாற்றில் முதன்முறையாக வெளிநாட்டு நாணயமான குவைத் தினார் ஒன்றின் பெறுமதி 1, 000 ரூபாவை கடந்துள்ளது.

இதன்படி, தனியார் வங்கிகளில் குவைத் தினார் ஒன்று 1001.70. ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை ஏனைய மத்திய கிழக்கு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபா மதிப்பும் சரிந்துள்ளது.

பஹ்ரைன் தினார் ஒன்றின் பெறுமதி 797.33 ரூபாவாகவும் ஓமான் ரியால் ஒன்றின் பெறுமதி 785.59 ரூபாவாகவும் கட்டார் ரியால் ஒன்றின் பெறுமதி 83.98 ரூபாவாகவும் சவுதி அரேபிய ரியால் ஒன்றின் பெறுமதி 84.24 ரூபாவாகவும் ஐக்கிய அரபு இராச்சியம் திர்ஹம் ஒன்றின் பெறுமதி 84.87 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

# பனை சார் உற்பத்தியாளர்களுக்கு நாவற்குழியில் உதவித்திட்டங்கள்!

(கலையமுதன்)

பனை சார் உற்பத்தியாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நாவற்குழியில் அமைந்துள்ளபனைஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெற்றது.

தென்னை கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் பனை அபிவிருத்தி சபையினால் தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதனொரு கட்டமாக பனை சார்ந்த உற்பத்திப் பொருன்கள் மேற்கொள்பவர்களுக்கு 20 கோடி ரூபா செலவில் உதவிகள் வழங்கப்படவுள்ளமையுடன் சம்பிரதாயபூர்வமாக மேற்படி உதவிகள் சிலருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தென்னை கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜா, யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா, வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிக்கக்கார, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். கொவிட் சிகிச்சை நிலைய மோசடி; உடனடி விசாரணைக்குப் பிரதமர் பணிப்பு

யாழ்.கொவிட் சிகிச்சை நிலையங்களில் இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் உடனடி விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.



வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) தொடர்பு கொண்டு இந்த விடயம் தொடர்பில் உடனடி கவனம் செலுத்துமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மூன்று இடைத்தங்கல் முகாம்களில் காணப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மாயமாகியிருந்தமை கணக்காய்வு அறிக்கையில் அம்பலமாகியது.

வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் கண்காணிப்பில் இந்தக் கொரோனா இடைத்தங்கல் முகாம்கள் செயற்பட்டுவந்தன.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு – இரட்டைவாய்க்கால் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு



முல்லைத்தீவு - இரட்டைவாய்க்கால் பகுதியில் இருந்து போரின் போது கைவிடப்பட்ட வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

இரட்டைவாய்க்கால் பகுதியில் வெடிபொருள்கள் கிடக்கின்றன என சிறப்பு அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்த சிறப்பு அதிரடிப் படையினர் வெடிபொருள்களை மீட்டுள்ளனர். இதன்போது கைக் குண்டு, சிறியரக எறிகணைகள், ஆர். பி.ஜி குண்டுகள் என்பன மீட்கப்பட் டுள்ளன. இதனை தொடர்ந்து நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அவற்றை அழிக்கும் நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது. மேலும் இந்த வெடிபொருள்கள் போரின் போது கைவிடப்பட்டவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**1. கேள்வி:-** தமிழ்நாடு பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை அவர்களின் பேட்டிகளைக் கேட்கிறீர்களா?

**பதில்:-** மனிதர் 'தூள்' கிளப்புகிறார்! அவரால் ஆளும் தி.மு.க. அணி கொஞ்சம் ஆடிப்போய் இருப்பது உண்மையே. அவர் பாரதீய ஜனதாவுக்குத் தமிழ்நாட்டில் நிழல் செய்யக் கிடைத்திருக்கும் தனிமரத்தோப்பு. அவரின் முயற்சியின் வெற்றிக்கு அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாட்டின் தேர்தல் களம் கட்டியம் கூறியிருக்கிறது. மனிதர் ஓயாமல் தினம் தினம் ஆளும் கட்சியின் வேரினை அசைத்துக் கொண்டிருக்கிறார். போகிற போக்கில் உதயசூரியனை வைத்தே தாமரையை மலரச் செய்துவிடுவார் போல் தெரிகிறது. அவரை விழுத்த முடியாமல் மற்றைய கட்சிகள் தடுமாறுகின்றன. அவரது கட்சிக்காரர்கள் அவரை விழுத்தாமல் இருந்தால் சரி.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'அண்ணாமல அண்ணாமல.. ஆசை வச்சேன் எண்ணாமலே.. அன்னம் தண்ணி உண்ணாமல எண்ணி ஏங்குறேன்'**

**2. கேள்வி:-** உங்கள் பேச்சின் வெற்றிக்கு உங்களின் இயல்பான நகைச்சுவையும் ஒரு காரணம் என்று சொல்வார்கள். நமது தமிழ்ச் சினிமாவில் உங்களைக் கவர்ந்த நகைச்சுவை நடிகர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?

**பதில்:-** என் காலத்திற்கு முற்பட்டவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள். ஆனாலும் பின்னாளில் அவர் நகைச்சுவைக் காட்சிகளைக் கண்டு வியந்திருக்கிறேன். சீர்திருத்தமும் சமூகப் பொறுப்புணர்ச்சியும் கொண்ட நகைச்சுவை அவரது தனி அடையாளம். உடற்பாஷையாலும் நகைச்சுவையை வருவிக்க வல்லவர். அவரது 'சிரிப்புப்'பாடல் ஒன்றே அவரது தரமான நகைச்சுவைக்கான சான்று பகரப் போதுமானது.

அடுத்து என்னைக் கவர்ந்தவர் 'டணால்' தங்கவேலு அவர்கள். வார்த்தைகளாலேயே வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் வல்லமை கொண்டவர் அவர். உடலால் அதிக சேட்டைகள் பண்ணாமல் வார்த்தைகளின் ஏற்ற இறக்கத்தாலேயே சிரிக்க வைப்பார். அவரும் நடிகை சுப்புலட்சுமியும் சேர்ந்து செய்த 'அதான் எனக்குத் தெரியுமே'நகைச்சுவை மறக்க முடியாதது.

இவரைத் தொடர்ந்து வந்து தமிழ் சினிமா உலகின் வரமாக வாழ்ந்தவர் நாகேஷ் அவர்கள். கோணங்கித்தனமான உடல் சேட்டைகளால் நகைச்சுவையை வருவித்த இவரது பாணி தனித்துவமானது. வயிறு வெடிக்க ரசிகர்களைச் சிரிக்க வைத்தாலும் அவரது நகைச்சுவைக் காட்சிகளுக்குள்ளும் வியக்கத்தக்க நடிப்பாற்றல்தான் பெரிதும் மேலோங்கி நின்றது. 'தில்லானா மோகனாம்பாள்' இவரது நகைச்சுவை, நடிப்பு எனும் இரண்டிற்குமான ஓர் தரமான உரைகல். 'காதலிக்க நேரமில்லை'யில் கதைசொல்லி மட்டுமே பாலையாவை மிரட்டும் நடிப்பு இன்றும் கண்ணுக்குள் நிற்கிறது.

அடுத்து வந்தவர் சுருளிராஜன். முகத்தையும் உடலையும் அஷ்டகோணலாக்குவதிலும் குரலை ஒரு விதமாய் மாற்றி இயல்பான நகைச்சுவையைத் தருவதிலும் வல்லவர் அவர். அவரைத் தொடர்ந்து வந்த தேங்காய் சீனிவாசன் நகைச்சுவை நடிகரேயானாலும் அதைவிட அவரின் 'சீரியஸ்'நடிப்பு ஒருபடி மேலானது என்பது என் அபிப்பிராயம்.

இவர்களைத் தொடர்ந்து சினிமா நகைச்சுவை உலகில் நீண்ட நாள்களாகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் செந்திலும், கவுண்டமணியும்தான். சிரிக்க வைத்தாலும் நகைச்சுவையில் தரமற்ற வார்த்தைகளைப் பிரயோகித்து பிழையான ஒரு முன் உதாரணத்தைக் காட்டிய பழி இவர்களுக்கானது. குறிப்பாகக் கவுண்டமணியின் முரட்டுத்தனமான நகைச்சுவைப் போக்கால் அதுநாள் வரையில் இருந்துவந்த கண்ணியமான தமிழ் சினிமா நகைச்சுவை மாசுபட்டது மறுக்கமுடியாத உண்மை. இந்த இருவரிலும் செந்தியின் அப்பாவித்தனமான நடிப்புத்தான் நகைச்சுவையின் உச்சம் தொட்டது. (அண்ணே இது உடையுமா அண்ணே - பெற்றோமாக்ஸ் பகிடி) இவ்விருவரில் செந்திலால்தான் இந்த ஜோடி நீண்டநாள் ஒழிற்று என்பது என் அபிப்பிராயம்.



இவர்களைத் தொடர்ந்து நகைச்சுவை உலகில் பெயர் பதித்தவர்கள் இருவர். ஒருவர் விவேக். மற்றவர் வடிவேலு. தங்கவேலு, சுருளிராஜன், செந்தில் ஆகியோரின் நகைச்சுவைகளின் கலவையாகி தனக்கென ஒரு புதியபாதையை வகுத்தவர் விவேக். சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்திக் கலைவாணர் பாணியையும் பின்பற்றினார். பல படங்களிலும் மக்களை வாய்விட்டுச் சிரிக்க வைத்த வல்லவர் அவர்.

வடிவேலுவும் தமிழ் சினிமா நகைச்சுவை உலகில் ஒரு மைல்கல் என்பதில் ஐயமில்லை. கடந்த சில ஆண்டுகளாக சினிமாத்துறை அவரை ஒதுக்கி வைத்திருந்த போதும் பட்டிதொட்டியெல்லாம் அவரது நகைச்சுவையே ஒலித்துக் கொண்டிருந்தது. உச்சந்தொட்ட அவரது குணச்சித்திர நடிப்பை மீறி அவரிடமிருந்த நகைச்சுவை நடிப்பு தனித்து ஈர்த்தது பெரிய அதிசயம். குரலின் ஏற்ற இறக்கங்களால் நகைச்சுவையை உருவாக்குவதில் வல்லவர் அவர். ('என்ன ரொம்பநல்லவன் என்னு சொல்லிட்டாங்கம்மா.') இன்றுவரை தமிழ்ச் சினிமா உலக நகைச்சுவையில் அவர் ஏற்றிய வெற்றிக்கொடிக்கு அப்பால் எவரது கொடியும் உயரவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இவர்களுக்குப் பின்னால் வந்த சந்தானம், சூரி ஆகியோர் வெறும் வெற்றுவேட்டுக்கள் என்பதே எனது அபிப்பிராயம். வடிவேலு ஒதுக்கப்பட்டிருந்த இடைவெளிக்குள் புகுந்ததுதான் இவர்களின் வெற்றிக்கான காரணமாயிற்று. சந்தானத்தின் கோணல் வாயும் அடிக்கடி அவர் அடிக்கும் அநாகரிகமான 'கொமெண்டுகளும்' சிரிப்புக்குப் பதிலாக எரிச்சலையே அதிகம் ஊட்டுவன. பெரும்பாலும் சூரியின் நிலையும் இதுதான். அவரது 'பரோட்டா' நகைச்சுவைதான் கடைசியும் முதலுமான அவரின் நகைச்சுவை என்று நினைக்கிறேன்.

இவ்விருவராலும் சோர்ந்து போயிருந்த தமிழ்ச் சினிமா நகைச்சுவை உலகு மீண்டுவர இருக்கும் வடிவேலுவின் 'நாய் சேகர்' நகைச்சுவைக்காகக் காத்திருக்கிறது. புதிதாக வந்திருக்கும் யோகிபாபு ஓரளவு ஈர்க்கிறார். அவர் பற்றி முழுமையான அபிப்பிராயம் சொல்ல இன்னும் சிலகாலம் தேவைப்படும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'சிரிப்புத்தான் வருகுதையா'**

**3. கேள்வி:-** சாணக்கியனால் சுமந்திரனுக்குப் பெருமையா? சுமந்திரனால் சாணக்கியனுக்குப் பெருமையா?

**பதில்:-** ஆற்றலை இனங்காண்பது முக்கியமா? ஆற்றலை இனங்காட்டுவது முக்கியமா? எனக்கேள்வி வந்தால் என் பதில் இரண்டுமே முக்கியம் என்பதாகத்தான் இருக்கும். சுமந்திரன் ஆற்றலை இனங்கண்டார். சாணக்கியன் ஆற்றலை இனங்காட்டினார். தந்தை மகனை அவையில் முந்தியிருக்கச் செய்தால் அது தந்தைக்குப் பெருமை. மகன், இவன் தந்தை 'என் நோற்றான்' என வியக்கச் செய்தால், அது மகனுக்குப் பெருமை. சுமந்திரன், சாணக்கியன் ஆகிய இருவரும் இவ் விடயத்தில் தம் கடமைகளைச் சரியாகச் செய்திருக்கிறார்கள். யாரால் யாருக்குப் பெருமையோ, இருவராலும் தமிழினத்திற்குப் பெருமை என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர்வழி நின்று நேர் வழி சென்றால் நாளைநமதே...'**

**4. கேள்வி:-** ஆறு.திருமுருகன் புதிய கோபுரத்தைக் கட்டியெழுப்பியது பற்றி?

**பதில்:-** கோபுரமாய் உயர்ந்து கொண்டிருப்பவர் கோபுரங்களை உயர்த்துவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

**உலகநாதரின் ஒப்பீனியன் * அடுத்த கோபுரம் எங்கேயாம்?**

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார நெருக்கடியை தமிழ் எம்.பிக்கள் எமது நலனுக்கு பயன்படுத்த வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் கோரிக்கை

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தமிழ் எம்.பிக்கள் எமது நலனுக்குப் பயன்படுத்த வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று 1,868 ஆவது நாளாக வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

இந்தப் பொருளாதார நெருக்கடியில், பொது வாக்கெடுப்பு அல்லது கொன்பெடரலிசத்தை உடன்படுவதற்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கை கடுமையான நிதி நெருக்கடியில் உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பொது வாக்கெடுப்பு அல்லது கொன்பெடரலிச முறைக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுடன் பேச வேண்டும்.

நமக்கு என்ன தேவை என்று உலகத் தலைவர்களிடம் கூற வேண்டும். நமக்கு என்ன தேவை என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியாது. எமக்குத் தேவையான எதையும் ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்கு இதுவே சிறந்த தருணம்.

நிதி நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு 10 வருடங்கள் ஆகும் என அமெரிக்கச் சிந்தனைக் குழு தெரிவித்துள்ளது. இது ஒரு பொன்னான வாய்ப்பு. அதை நாம் தவறவிடக்கூடாது. நிதி நெருக்கடி, மறு இன மக்களுக்கு நிரந்தரத் தீர்வைக் காண நாட்டைக் கட்டாயப்படுத்துகிறது.

அவை அனைத்தையும் நாம் பட்டியலிடலாம், இந்தோனேஷிய ஆக்கிரமிப்பாளர் இலங்கையைப் போல நிதி ரீதியாக உடைந்தமையால் கிழக்கு திமோர் சுதந்திரமாகச் செல்ல முடிந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

13 அல்லது 13 பிளஸ் அல்லது சமஷ்டியைக் கேட்க வேண்டாம் என்று நாங்கள் எங்கள் அரசியல்வாதிகளைக் கேட்டுக்கொள்கிறோம். இந்த அரசியல் தீர்வுகள் அனைத்தும் ஒற்றையாட்சியின் கீழ் வருகின்றன. அதாவது 2/3 சிங்களவர்களின் பலம் எந்த அரசியல் தீர்வையும் கலைக்க முடியும்.

இது தமிழ் அரசியல்வாதிகளுக்குத் தெரியுமா இல்லையா என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். பொது வாக்கெடுப்பு கேட்கவும் அல்லது குறைந்தபட்சம் கொன்பெடரலிசத்தை கேட்கவும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோட்டாபயவும் புலம்பெயர் தமிழ் மக்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றனர்.

ஆனால் புலம்பெயர் மக்கள் சிலரிடம் பேசினேன். தமிழ் எம்.பி.க்கள் மற்றும் சிங்களத் தலைவர்களைத் தாம் ஒருபோதும் நம்புவதில்லை என அவர்கள் என்னிடம் கூறியுள்ளனர். அவர்களைப் புரிந்துகொள்ள, நாம் தலைகீழ் உளவியலைப் பயன்படுத்த வேண்டும் என்றார்கள்.

இந்தப் பொருளாதார நெருக்கடி வாய்ப்பைத் தமிழர்கள் தவறவிட்டால், வரலாறு அவர்களைச் சேர். பொன். இராமநாதன், பொன். அருணாச்சலம் மற்றும் பிற தமிழ் துணைப்படை போன்ற சுயநலவாதிகளாகப் பட்டியலிடும்.



எனவே சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோர் பொது வாக்கெடுப்பு அல்லது கொன்பெடரலிசத்தை கோர வேண்டும் அல்லது தெரிவு செய்யப்பட்ட பதவியை விட்டு விலக வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

பொது வாக்கெடுப்பு என்பது பிரிவினையைக் கேட்பதல்ல, தமிழர்கள் விரும்புவதைக் கண்டறியும் கருவியாகும். பொது வாக்கெடுப்பு கேட்பது அரசமைப்பின் 6ஆவது திருத்தத்தின் மூலம் தண்டனைக்குரியது அல்ல. – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் எரிபொருளுக்கு வரிசையில் நிற்கும்போது தட்டுப்பாடு இல்லை என்று கூறும் அமைச்சர்கள்!

## கயந்த கருணாதிலக்க எம்.பி. காட்டம்



மக்கள் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசைகளில் நிற்கும் போது சில அமைச்சர்கள் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என்று எந்த அடிப்படையில் கூறுகின்றனர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைக் கொள்வனவு செய்யப் பொதுமக்கள் வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

மக்கள் மண்ணெண்ணெய், டீசலைக் கொள்வனவு செய்ய அலைந்து திரியும் போது, எரிபொருள் தட்டுப்பாடு இல்லை, தேவையான அளவு எரிபொருள் கையிருப்பு அரசாங்கத்திடம் இருக்கின்றது என அமைச்சர்கள் கூறுகின்றனர்.

மேலதிகமாகவும் எரிபொருள் இருப்பதாகக் கூறுகின்றனர். மேலதிகமாக எரிபொருள் இருப்பதால், சில எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் எரிபொருள் கொள்கலன் வண்டிகளை திருப்பி அனுப்புகின்றனர் எனவும் அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர்.

கண்களுக்கு புலப்படும் இந்த விடயம் பற்றி இப்படி பொய்களைக் கூறுவார்கள் என்றால், கண்ணுக்கு தெரியாத எத்தனை விடயங்களை மக்களுக்கு மறைத்திருப்பார்கள் என்பது எம்மால் புரிந்துகொள்ள முடியும். குடும்ப ஆட்சி, முழு நாட்டை சிக்கலாக மாற்றியுள்ளது.

நாட்டில் தற்போது மின்சாரம் துண்டிக்கப்பட்டு வரும் விதத்தைப் பார்க்கும் இனிவரும் காலங்களில் மின் துண்டிக்கப்படும் நேரத்துக்குப் பதிலாக மின் விநியோகம் வழங்கப்படும் நேரம் பற்றி அறிவிக்க நேரிடும்.

மக்களுக்குத் தொடர்ந்தும் மின் விநியோகத்தை வழங்குவது தொடர்பான விடயங்களை அறிவிக்கவே பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

எனினும் மக்களை பல மணிநேரம் இருளில் வைக்கும் நேரத்தை அறிவிக்கும் ஆணைக்குழுவாக அது மாறியுள்ளது எனவும் கயந்த கருணாதிலக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# சைக்கிள் திருடன் காரைதீவில் கைது



நீண்ட காலமாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞனை காரைதீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது, மருதமுனை, காரைதீவு, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக சைக்கிள்கள் களவாடப்பட்டு வருகின்றன என பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். கடந்த வியாழக்கிழமை மதியம் காரைதீவு விசேட பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 22 வயதுடைய இளைஞன் கைதானார்.

இவ்வாறு கைதான இளைஞனை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையுடன் சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடைய கைதான சந்தேக நபரிடமிருந்து இதுவரை 15 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 250 கிலோ கேரள கஞ்சாவுடன் நீர்கொழும்பில் இருவர் கைது!

பெருந்தொகை கேரள கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு தடாகத்திற்கு அருகில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்து 250 கிலோ கிராம் கேரள கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டுள்ளமையுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட சொகுசு வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி சுமார் 10 கோடி ரூபா என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# 9 ஆயிரம் மாணவர்களுக்கு தரம் 5 புலமைப்பரிசில் நிதி

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட அடிப்படையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளை பெற்று சித்தியடைந்த 9 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கப்படவுள்ளது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் அங்கத்தவராக வுள்ளவர்களின் பிள்ளைகளுக்கும் இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. 15 ஆயிரம் ரூபா பெறுமதியான இப்புலமைப்பரிசிலைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் தலைமைக் காரியாலயத்திலும் மற்றும் பிராந்திய காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

மே மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி சமர்ப்பிக்க முடியும்.

காலைக்கதிர்
Kalaikkathir

# முடியாவிட்டால் ஆட்சிப்பொறுப்புகளை திறமையானவர்களிடம் ஒப்படைக்குக!

## ஞானாசார தேரரும் காட்டம்



இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால் ஆட்சி செய்யும் திறமையுடையவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் கோரியுள்ளார்.

தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியாவிட்டால்தீர்வுவழங்கக்கூடிய ஆட்சியாளர்களிடம் அரசாங்கம் நாட்டை ஒப்படைக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மாறாக நாடு கட்டுப்பாடின்றி செல்ல அனுமதிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் போராட்டங்களால் நாடு மேலும் அராஜக நிலைக்குத் தள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தை குற்றம் சுமத்தி ஆட்சி செய்ய முடியாது எனவும் கூட்டாக இணைந்து எடுக்கப்படும் தீர்மானங்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் கடுமையான அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டு மக்களின் பட்டினியுடன் அரசாங்கத்தினால் விளையாட முடியாது, இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கியது போன்று அரசாங்கத்தால் ஏன் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்பொழுது ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லை, பிரதமர் மீது நம்பிக்கையில்லை, அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நம்பிக்கையில்லை இவ்வாறு நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# நாடு வங்குரோத்து அடைந்ததாக உலகிற்குக் காட்டுகின்றமை தவறு!

## டயனா கமகே எடுத்துரைப்பு

இலங்கை வங்குரோத்து அடைந்த நாடு என உலகத்திற்கு காட்டுவது தவறு என நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்துள்ளார். செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

எமது நாடு வங்குரோத்து அடையவில்லை. உலகில் ஏனைய நாடுகளைப் போல் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. இப்படியான நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டை ஆட்சி செய்திருக்குமாயின் நிலைமை இதனை விட மோசமாக இருந்திருக்கும்.

டொலர்கள் வானத்தில் இருந்து கொட்டா, யார் ஆட்சிக்கு வந்தாலும் திட்டங்கள் இருக்க வேண்டும் எனவும் டயனா கமகே கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராத் தெரிவான டயனா கமகே தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருன்றமை குறிப்பிடத்தக்கது.

# பாட்டும் நானே? ........

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**5. கேள்வி:-** ரஷ்ய, உக்ரைன் யுத்தத்தில் என்னதான் நடக்கிறது? போரில் ரஷ்யா வெல்கிறதா? தோற்கிறதா?

**பதில்:-** உண்மையில் இது ரஷ்ய - உக்ரைன் யுத்தமே அல்ல! அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான யுத்தம் இது என்பதுதான் உண்மைநிலை. இவ்விருவரின் பலப் பரீட்சைக் களமாக மாறிப்போனது உக்ரைனின் துரதிஷ்டம். ரஷ்யா பலவீனப்பட்டிருப்பதாய் நினைந்தும், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் தமக்குத் துணைவரும் என்பதாய் நினைந்தும் உக்ரைன் அதிபர் 'ஜெலென்ஸ்கி'போட்ட தப்புக்கணக்கால் இன்றைக்கு உக்ரைன் அடிவாங்கிக் கொண்டிருக்கிறது. அவரது இரண்டு முடிவுகளும் பிழையானவை என்பதை போர்க்களம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. கைதரும் என அவர் நம்பிய 'நேட்டோ' கை உதறிவிட 'ஜெலென்ஸ்கி'யின் நிலை 'திரிசங்கு சொர்க்கமாகி' இருக்கிறது.

'ஜெலென்ஸ்கி' வெறும் வார்த்தைகளால் விளையாடித் தனது மதிப்பை உயர்த்த முயன்று கொண்டிருக்கிறார். ஆனால் பாவம் உக்ரைன் பாதாளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. போர் முடியாத இன்றைய நிலையில் இவர்களில் யார் வென்றார்கள் என்று சொல்வது நியாயமல்ல. ஆனால் ஒன்றை நிச்சயமாய்ச் சொல்ல முடியும், அமெரிக்க, ஐரோப்பியநாடுகளின் மூக்கை, ரஷ்ய அதிபர் 'புட்டின்' ஓரளவு உடைத்துத்தான் இருக்கிறார். அவர்கள் போட்ட தடைகளுக்கு எதிரான தடை, டொலருக்கு எதிரான ரஷ்யப் பணத்தின் பிரயோகம் என அவர் செய்யும் வித்தைகளால் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் ஆடிப்போய் இருக்கின்றமை மறுக்க முடியாத உண்மையே. இவற்றை வைத்துப் பார்த் தால் நடந்துகொண்டிருக்கும் உக்ரைன் யுத்தத்தை வைத்து, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக ரஷ்யா ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ரஷ்யா வாரிதியாருக்கு விருது ஏதும் கொடுத்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை.**

**6. கேள்வி:-** நாங்கள் பேரினத்தாரின் பிரதிநிதிகள் என்று தேர்தலில் வெற்றிபெற்ற காலத்தில் 'மார்தட்டிய' அரசு இன்று தடுமாறி விழப்போகும் நேரத்தில் தமிழர்களின் கையைப் பிடிக்க நினைப்பதும் அவர்களுக்கு 'வாகாக' கூட்டமைப்பினர் கையை நீட்டுவதும் சரிதானா?

**பதில்:-** சரி என்பதுதான் எனது அபிப்பிராயம்! தேர்தல் வெற்றி தந்த 'தலைக்கனத்தால்' அப்போது ஆட்சியாளர்கள் அப்படிப் பேசியது உண்மையே! மனிதர்களின் புத்திக் கணக்கைவிட ஏதோ ஒருசக்தி உலகைச் சமப்படுத்திக் கொண்டேயிருப்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். இன்று அந்தச் சக்தி அவர்களை அடிக்கத் தொடங்க, பாவம் 'அலமந்து' நிற்கிறார்கள்.

'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை'என்று வள்ளுவர் அன்றே சொல்லிவிட்டார். தமிழ் மக்கள் அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர், இன்று அவர்களின் செல்வத்தைத் தேய்க்கத் தொடங்கியிருக்கிறது.

அவ் உண்மையை உணர்ந்தார்களோ, அல்லது மீண்டும் புத்திசாலித்தனம் பண்ணித் தமிழர்களை ஏமாற்ற நினைக்கிறார்களோ தெரியவில்லை. இயற்கை தரும் சந்தர்ப்பத்தை இழிவு செய்தால் திரும்ப அதற்கு மேல் விழும் அடி மீறமுடியாததாய்த் தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கூட்டமைப்பின் செயலைப் பிழை என்று சொல்ல முடியாது. தமிழர்களின் உரிமையை நிலைநிறுத்தும் பொறுப்பினை ஏற்றே அவர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தார்கள். அதனால் அதற்கான வாய்ப்பு வரும்போதெல்லாம் அதனை அவர்கள் பயன்படுத்த நினைப்பதில் தவறில்லை என்றே நினைக்கிறேன். நமக்குத் தேவையானது 'உரிமை மாம்பழம்.' அதனைச் சிவன் தந்தால் என்ன? நாரதர் தந்தால் என்ன? பெற்றுக் கொள்ள வேண்டியதுதான் புத்திசாலித்தனம். வெறுமனே உணர்ச்சிக் கூக்குரல்களிட்டு வரும் சந்தர்ப்பங்களைத் தவறவிடுவதால் இனத்திற்கு எந்த நன்மையும் இல்லை. அதற்கென்றுதான், எதையும் சாதிக்காமல் பேசிக் கொண்டேயிருக்கும் முன்னாள் முதலமைச்சர், கஜேந்திரகுமார் போன்றோர் இருக்கின்றார்களே! அவர்கள் அதனைச் செய்யட்டும்! இவர்கள் நடக்கவேண்டிய காரியத்தைக் கவனிக்கட்டும். அதுதான் இனத்திற்கு நல்லது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'பகல் வெல்லும் கூகையைக் காக்கை' என்று வள்ளுவர் சும்மாவா சொன்னார்.'காலம் அறிதல்' என்பது இதைத்தானுங்கோ!**

# சட்டவிரோத மணல் அகழ்வுக்கு பொலிஸார் முழு ஒத்துழைப்பு!

## பலதரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸாரின் பாதுகாப்பு மற்றும் முழுமையான ஒத்துழைப்புக்களுடனேயே சட்டவிரோத மணல் அகழ்வுகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகச் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை, மாறாகப் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்புடன் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸார் மீது பொது அமைப்புக்களாலும் பொதுமக்கள் பிரதிநிதிகளாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது சட்டத்தால் மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்புடன் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக முரசுமோட்டைப் பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகளால் விவசாய வீதிகள், விவசாய நிலங்கள், நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் முற்றாகச் சிதைந்து வருகின்றன.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து மணல் அகழ்வைத் தடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்ட போது சம்பவ இடத்துக்கு மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்களுடன் சிவில் உடையில் வருகை தந்த பொலிஸார் இதைத் தடுப்போம் என கூறிவிட்டு அடுத்த நிமிடமே அவர்களின் பாதுகாப்புடன் மணல் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன என்பதை வெளிப்படையாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேபோன்று பளை பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுத்து வந்த கிராம அலுவலர் பிரதான வீதியால் சென்று கொண்டிருக்கும்போது சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களால் கனரக வாகனத்தால் மோதிய சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் திட்டமிட்ட தாக்குதலை மூடிமறைத்து ஒரு விபத்தாக பொலிஸார் பதிவு செய்திருக்கின்றனர் எனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸார் சொந்தமாகக் கனரக வாகனங்களை வைத்து அவர்களே சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தூண்டும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்

## இலங்கை ஆசிரியர் சங்கம் ஆளுநருக்குக் கடிதம்

தற்போது வடமாகாண கல்விப் பணிமனையால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்ற பட்டியலில் பக்கச்சார்புகள் காணப்படுகின்றன எனவும் – தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றம் நடைபெறவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் – இந்த விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கும் – வடமாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கும் முறைப்பாடு ஒன்றை 31.03.2022 திகதியிட்டு அனுப்பியுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இடமாற்றத்துக்கு தகுதியான பலரது இடமாற்றம் – அந்தப் பட்டியலில் நிராகரிக்கப்பட்டுள்ளபோது, ஒரு சிலருக்கு மட்டும், இடமாற்றச்சபையின் பரிசீலனையின்றி, இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும், தற்போது வெளிவந்துள்ள – இடமாற்றம் நிராகரிக்கப்பட்டதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிலுள்ள சில ஆசிரியர்களுக்கு –வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஏற்கனவே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் – இன்னும் சிலர் இடமாற்றப் பட்டியலில் தகுதிபெற்றுள்ளபோதும் அவர்களுக்கான இடமாற்றங்கள் –இடமாற்றப் பரிசீலனைக்கு முன்பதாகவே வழங்கப்பட்டுள்ளன எனவும் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப்பாளரால் – இடமாற்ற நடைமுறைகளில் பாரபட்சங்கள் தொடர்ச்சியாகவே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனக் குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் – தற்போதைய வருடாந்த இடமாற்ற நடைமுறை தொடர்பாகத் தமது அதிருப்தியையும் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இடமாற்ற நடைமுறைகளும் மேன்முறையீடுகளும் – பதிலீட்டு இடமாற்றங்களும் – இடமாற்றக் கொள்கையின் அடிப்படையிலும் – நேர்மையாகவும் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் – வடமாகாண கல்விப் பணிப்பாளரின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறும் – தம்மைத் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குச் செல்லத் தூண்டும் அவரது அதிகார துஷ்பிரயோகம் மற்றும் பக்கச் சார்பான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருமாறும் அந்தக் கடிதத்தின் மூலம் வடமாகாண ஆளுநரிடமும் கல்வியமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

2021 – 2022 ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற செயற்பாடுகள் அனைத்தும் கடந்த 2021 டசம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். – அவற்றுக்கான மேன்முறையீடுகளும் – பதிலீடுகள் வழங்குதல் தொடர்பாகவும் பரிசீலிக்கப்பட்டு – தற்போது அவற்றையும் முடிவுக்கு கொண்டுவந்திருக்க வேண்டும். ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய கல்வியாண்டுக்கான செயற்பாடுகள் சர்ச்சைகள் இன்றி ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவை தொடர்பாக முறையான செயற்பாடுகள் – பொருத்தமான காலப்பகுதிக்குள் வடமாகாணக் கல்வித்திணைக்களத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை.

தற்போது வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றப்பட்டியல் தொடர்பாகப் பல்வேறு விதமான பக்கச்சார்புகள் நடைபெற்றுள்ளமை தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன. மேற்படி இடமாற்றங்கள் தொடர்பாக வடமாகாண கல்விப் பணிமனையால் கடந்த 2022.03.23 ஆம் திகதி – ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த கலந்துரையாடலுக்கு – இலங்கை ஆசிரியர் சங்கம் கலந்துகொள்ள முடியாதவாறு – காலதாமதமாகக் கடிதம் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பப்பட்டிருந்தது. இத்தகைய பின்னணியிலேயே மேற்படி இடமாற்றப்பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

வெளிமாவட்டத்தில் இருந்து ஏனைய கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் பெறத் தகுதியான 654 ஆசிரியர்களின் விவரங்களும் – இடமாற்றம் நிராகரிக்கப்பட்ட 655 ஆசிரியர்களின் விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்திலிருந்து பதிலீட்டு அடிப்படையில் வெளிமாவட்டங்களில் பணியாற்றி இடமாற்றத்துக்கான காலங்களைப் பூர்த்திசெய்துள்ள ஆசிரியர்களின் பெயர்களும் இடமாற்றம் நிராகரிக்கப்பட்ட பட்டியலிலேயே இடம்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்த இடமாற்ற விண்ணப்பங்கள் தொடர்பாகவோ – மேற்படி ஆசிரியர்கள் விண்ணப்பித்த வலயங்களுக்கு விடுவிப்பதற்கான நேர்த்தியான பொறிமுறை மற்றும் முன்னுரிமையைத் தீர்மானிக்கும் பொதுவான நடைமுறை தொடர்பாகவோ – எமது பிரதிநிதித்துவத்துடனான இடமாற்றச்சபை கூட்டப்பட்டு ஆலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

வருடாந்த இடமாற்றம் 2007.12.13 ஆம் திகதிய 2007/20 இலக்க அதிபர் இ ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் விதிமுறைகளையும் தாபனவிதிக் கோவையில் குறிப்பிட்டுள்ளவாறான – இடமாற்ற சபை நடைமுறைகஷ்ள மீறியுமே செயற்படுத்தப்பட்டுள்ளமையை தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

தற்போது வெளிமாவட்டங்களிலிருந்து இடமாற்றம் வழங்கப்பட்ட 654 ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கும், ஏற்கனவே வெளிமாவட்டங்களில் நீண்டகாலமாக உள்ள வெற்றிடங்களுக்கும் – பதிலீட்டு ஆசிரியர்களை அனுப்புவது தொடர்பாக – எவ்வித வெளிப்படைத் தன்மைகளையும் – வடமாகாண கல்விப் பணிப்பாளர் பின்பற்றுவதில்லை.

யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிமாவட்ட சேவை எதனையும் செய்திராத ஆசிரியர்களைக்கொண்டு வெளிமாவட்டத்தில் ஏற்படும் வெற்றிடங்களை பதிலீட்டு இடமாற்றத்தினூடாக – குறிப்பிட்ட காலப்பகுதிக்கேனும் ஈடுசெய்வது தொடர்பாக எடுக்கப்படும் இடமாற்றச் சபைத் தீர்மானங்கள் முறையாக நடைமுறைப் படுத்தப் படவில்லை. அத்துடன், 2007 – 20 அதிபர் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையைப் புறக்கணித்தும் பக்கச்சார்பாகவும் தன்னிச்சையாகவுமே வடமாகாண கல்விப் பணிப்பாளர் இடமாற்றங்களை மேற்கொண்டு வந்துள்ளார்.

பதிலீட்டு இடமாற்றங்களின் போதான நடைமுறைகள் தொடர்பாக இடமாற்றச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை. பாரபட்சமாகவே நடைமுறைப்படுத்தி வந்துள்ளதோடு – ஒரே வருடத்தில் வழங்கப்பட்ட ஒரே வகுதியைக் கொண்ட இடமாற்றங்களுக்குக் கூட – வெவ்வேறு இடமாற்ற நிபந்தனைகளையும் மாகாண கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ளார். யாழ்.மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களைச் சேர்ந்த பலர் – வெளிமாவட்டங்களில் பணியாற்றியிராத நிலையில் – அவர்களுள் சிலருக்குரிய இடமாற்றங்களை, இடமாற்றச்சபைத் தீர்மானங்கள் எவையுமின்றி, வருடக் கணக்காகப் பிற்போட்டும் வருகின்றார். இதன் மூலம் – இடமாற்ற வயதெல்லைக்காலத்தை அண்மிக்கும் வரை இடமாற்றங்களைப் பிற்போடும் நோக்கத்தோடே வடமாகாண கல்விப் பணிப்பாளர் செயற்பட்டு வந்துள்ளார்.

மேற்படி இடமாற்றங்கள் தொடர்பாக – வெளிப்படைத் தன்மையாக செயற்படும்படி இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்த போதும் – 'சேவையின் அவசிய தேவை கருதிய' இடமாற்றம் தொடர்பாக – இடமாற்றச்சபைக்குத் தக வல் வழங்கும் அவசியமில்லை' என்ற அதிகார துஷ்பிரயோக நடைமுறைகளையே பின்பற்றி வந்துள்ளார். இத்தகைய தன்னிச்சையான – பக்கச்சார்பான – சட்டவிரோத நடைமுறைகளின் மூலமே பாரபட்சங்களை மேற்கொண்டு வருகின்றார்.

2007–20 இலக்க இடமாற்றச் சுற்றிக்கையின் – பிரிவு 2.4 இன் ஆசிரியர் இடமாற்றச் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக முதலாம் பந்தியில் 'தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக இரு வாரத்துக்குள் அது தொடர்பாக இடமாற்றச் சபைக்கு அறிவிக்க வேண்டும்' எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள நிலையிலும் வடமாகாண கல்விப் பணிப்பாளரால் அந்த நடைமுறைகள் உதாசீனம் செய்யப்பட்டே வந்துள்ளன என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

யாழ்.மாவட்டங்களிலிருந்து இடமாற்றங்கள் வழங்கப்படுபவர்களின் இடமாற்றங்களின் போது – மனிதாபிமான நடைமுறை என்னும் போர்வையில் பாரபட்சமாக செயற்படும் வடமாகாண அதிகாரிகளால் – அதை விட மோசமான பாதிப்புக்களுக்கும் – பொருளாதார நெருக்கடிகளுக்கும் சிக்கித் தவிக்கும் – வெளிமாவட்டங்களில் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதில்லை என்பது மிகமோசமான பாரபட்சங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தகைய பின்னணியிலேயே வடமாகாண ஆசிரியர் இடமாற்றங்கள் மிக மோசமான நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன. தற்போது வெளிவந்துள்ள – இடமாற்றம் நிராகரிக்கப்பட்டதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிலுள்ள சில ஆசிரியர்களுக்கு, வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஏற்கனவே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் – இன்னும் சிலர் இடமாற்றப் பட்டியலில் தகுதிபெற்றுள்ளபோதும் – அவர்களுக்கான இடமாற்றங்கள் – இடமாற்றப் பரிசீலனைக்கு முன்பதாகவே வழங்கப்பட்டுமுள்ளன.

எனவே – இடமாற்றத்துக்கு தகுதியான பலரது இடமாற்றம் தொடர்பான பட்டியலில் நிராகரிக்கப்பட்டுள்ளபோது – ஒரு சிலருக்கு மட்டும் – இடமாற்றச் சபையின் பரிசீலனையின்றி – இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமை மோசமான பாரபட்சமாகும்.

வடமாகாண கல்விப் பணிப்பாளரால் – இடமாற்ற நடைமுறைகளில் பாரபட்சங்கள் தொடர்ச்சியாகவே மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், இலங்கை ஆசிரியர் சங்கத்தைப் புறக்கணித்து மேற்கொள்ளப்பட்ட தற்போதைய வருடாந்த இடமாற்ற நடைமுறை தொடர்பாக எமது அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடமாற்ற நடைமுறைகளும் மேன்முறையீடுகளும் – பதிலீட்டு இடமாற்றங்களும் – இடமாற்றக் கொள்கையின் அடிப்படையிலும் – நேர்மையாகவும் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடமாகாண கல்விப் பணிப்பாளரின் மேற்படி முறையற்ற செயற்பாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறும் – எம்மைத் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குச் செல்லத் தூண்டும் அவரது அதிகாரதுஷ்பிரயோக மற்றும் பக்கச் சார்பான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருமாறும் கேட்டுக்கொள்கின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போனோரின உறவினர்களின் பேரணிக்கு அனைவர் ஆதரவும் தேவை!

## பொத்துவில் – பொலிகண்டி மக்கள் பேரெழுச்சி இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 02

கடந்த 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீலங்காவின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்த போது, தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மைநிலையை அறியும் முகமாக கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்த முற்பட்ட தாய்மார்கள், வயோதிபப்பெண்கள் மீதுஇலங்கையின் பாதுகாப்புத் தரப்பினர் மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தி அவர்களைக் காயப்படுத்தியமையை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.


அத்துடன் இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டியும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் மாபெரும் கண்டன போராட்டத்தை எதிர்வரும் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நடத்த இருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

மேலும் நீதிக்கான இந்தப் போராட்டத்தில் மக்கள் இயக்கங்கள், சிவில் அமைப்புக்கள், மதத்தலைவர்கள், தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள், மகளிர் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் அமைப்புக்கள், வர்த்தகர் சங்கங்கள், கிராமமட்ட அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மீனவர் சம்மேளனங்கள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், ஓட்டோச் சங்கங்கள், விவசாய அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கள், பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கள், ஊடகவியலாளர்கள் என அனைத்து அமைப்புக்களையும் மக்களையும் பெரும் எழுச்சியாக பங்குபற்றுமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்.கண்டனப் பேரணியில் சகலரும் அணிதிரளுங்கள்!

## விக்னேஸ்வரன் அழைப்பு



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் தரிப்பிடத்தில் நடத்தவிருக்கும் கண்டனப் பேரணிக்கு ஆதரவைத் தெரிவித்திருக்கும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பேரணியில் சகல பொதுமக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு பின்னரான தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கங்கள் மிகவும் முக்கியமானதும் காத்திரமானதுமான வகிபாகத்தை மேற்கொண்டு வருகின்றன.

பல்வேறு சிரமங்கள், இடையூறுகள், சவால்களின் மத்தியில் மன உறுதியுடன் தளராமல் அவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டங்களுக்கு நாம் அனைவரும் எம்மால் இயன்றளவு உடல், உள ரீதியான ஆதரவை கொடுப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டித்தும் நீதிக்காக போராடும் தாய்மார்களின் நியாயமான கோரிக்கையினை வலியுறுத்தும் நோக்கங்களுக்காகவே நாளை கண்டனப் பேரணி யாழ்ப்பாணம் பஸ் தரிப்பிடத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நான் சுகயீனமாக இருப்பதால் என்னால் அன்றைய தினம் கலந்துகொள்ள முடியுமோ தெரியவில்லை. ஆனால், இந்தப் போராட்டத்தில் எனது கட்சி, உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரையும் மற்றும் பொதுமக்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றேன் – என்றார்.

# எரிபொருள் விநியோகத்தில் குழப்பம்

(ந.லோகதயாளன்)

யாழில் சிறைச்சாலைக்கு என்னும் பெயரில் தனியார் விடுதிக்கு 250 லீற்றர் டீசலை வழங்க முற்பட்டதனால் எரிபொருள் விற்பனை நிலையத்தில் இரவு நேரம் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நேற்று இரவு 11மணியளவில் பட்டா வாகனத்தில் 50 லீற்றர் கொள் அளவு கொண்ட 5 கான்களில் டீசலை நிரப்ப முயன்ற சமயம் வரிசையில் நின்ற ஏனைய வாகன உரிமையாளர்களின் குழப்பத்தினால் எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் அங்கிருந்து தப்பித்து தலை மறைவாகினர்.

இதனால் எரிபொருள் விநியோகமும் தடைப்பட்டதோடு வாகன உரிமையாளர்களும் கடும் அதிருப்தி வெளியிட்டனர்.

# வேலன் சுவாமியும் அழைப்பு




காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு சர்வதேச நீதி கோரி யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நாளை நடைபெறவுள்ள கண்டனப் பேரணிக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் அழைப்பு விடுத்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நீதிக்கான இந்தப் போராட்டத்தில் மக்கள் இயக்கங்கள், சிவில் அமைப்புக்கள், மதத்தலைவர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், மகளிர் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் அமைப்புக்கள், வர்த்தகர் சங்கங்கள், கிராமமட்ட அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மீனவர் சம்மேளனங்கள், தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், ஓட்டோ சங்கங்கள், விவசாய அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கள், பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கள், ஊடகவியலாளர்கள் என அனைத்து அமைப்புக்களையும் மக்களையும் பெரும் எழுச்சியாக பங்குபற்றுமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் அன்புரிமையுடன் அழைத்து நிற்கிறோம் – என்றார்.

# பனைசார் உற்பத்தியாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு



(இ.கலையமுதன்)

பனை சார் உற்பத்தியாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நாவற்–குழியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

தென்னை கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் பனை அபிவிருத்தி சபையினால் தொழிலாளர்களை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனொரு கட்டமாக பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களை மேற்கொள்பவர்களுக்கு 200 மில்லியன் ரூபா செலவில் உதவிகள் வழங்கப்படவுள்ளதுடன் சம்பிரதாயபூர்வமாக குறித்த உதவிகள் சிலருக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தென்னை கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ, பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிாந்த பத்திராஜா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சிறீசற்குணராஜா, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிகக்கார, யாழ் மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. நுகேகொடை விஜயராம சந்தியில் நேற்றிரவு கூடிய பல்கலைக்கழக மாணவர்கள் கையில் தீப்பந்தங்களை ஏந்திஒ போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் அமைச்சர்களின் வீடுகள் மற்றும் அரச தரப்பு முக்கியஸ்தர்களின் இல்லங்களில் முன்னால் இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் இரவு மிரிஹான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட 54 பேரில் 48 பேருக்கு பிணை வழங்கப்பட்டது. 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் கொழும்பில் தொடர்ந்து பதற்ற நிலை நீடிக்கிறது.

## அமைச்சுப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரவு வரை கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இன்று கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## தொடரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்ட மாவட்டங்களின் பல இடங்களில் நேற்றுப் பகலும் இரவும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் போராட்டங்களில் பெரும்பாலானவர்கள் பங்கேற்று, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக சம்பவ இடங்களுக்கு மேலதிகமாகப் பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

இந்நிலையில், பதற்ற நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையில் மேல் மாகாணத்தில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கமைய, நேற்று நள்ளிரவு 12 மணி முதல் இன்று காலை 6 மணி வரை பொலிஸ் ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

## விடுதலைப் புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கத் தகுதியுள்ளவரா?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி..

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றின் பின்னர் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேறினால் சந்தோசமடைவோம் என்று கூறியிருந்தார்.

இந்தநிலையில், சுமந்திரன் எம்.பியின் கருத்துக்கு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பதிலளித்துள்ளார்.

மஅவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழீழ விடுதலை இயக்கம் விலகிச் சென்றால் தமிழரசுக் கட்சி சந்தோசப்படும் என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகி 10 வருடங்களின் பின்னரே சுமந்திரன் கட்சிக்குள் வந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் ரெலோ முக்கிய பங்காற்றியிருந்தது. கிழக்கில் உள்ள தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் பலருக்கும் அது தெரியும்.

ஆயுதப் போராட்டத்தை வன்முறையென சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். வன்முறையை ஏற்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

சுமந்திரன் வன்முறை எனக் குறிப்பிடும் வே.பிரபாகரனின் ஆசீர்வாதத்துடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தக் கூட்டமைப்பில் சுமந்திரன் எப்படி அங்கம் வகிக்க முடியும்?

இதேவேளை, சுமந்திரனின் கருத்து தமிழரசுக் கட்சியின் கருத்தா என்பதை அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும், சுமந்திரனின் கருத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தா என்பதை இரா.சம்பந்தனும் தெளிவுபடுத்த வேண்டும்.

போராட்டத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திலும் ஒரு துளியளவு பங்களிப்பையும் செலுத்தாதவர் சுமந்திரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அனைவருக்கும் முன்பாகவே எமது முடிவை அறிவித்தோம். எமது முடிவு ஜனநாயக ரீதியிலானது என இரா.சம்பந்தனும் தெரிவித்திருந்தார்.

சுமந்திரன் பல தடவைகள் சீண்டிய போதும், நாம் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மௌனம் சாதித்தோம். இப்போது சுமந்திரன் சொன்ன கருத்து பாரதூரமானது. அதற்குப் பதிலடி கொடுப்போம்.

எம்மைத் துரோகிகள் போல் சுமந்திரன் பொய்யான கருத்தைத் தெரிவித்திருந்தார். நாம் துரோகிகளாக புலிகளால் பார்க்கப்பட்டிருந்தால், கூட்டமைப்பை உருவாக்கும் பணியை புலிகள் எம்மிடம் தந்திருக்க மாட்டார்கள்.

விடுதலைப்புலிகளும், ரெலோவும் எப்படி அன்னியோன்யமாக செயற்பட்டார்கள் என்பது வரலாறு தெரிந்தவர்களுக்கும், விடுதலைப்புலிகளின் மூத்த போராளிகளுக்கும் நன்கு தெரியும். வவுனியாவில் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து செயற்படுவதாகக் கூறி, எமது உறுப்பினர்களும், அலுவலகங்களும் தாக்கப்பட்டிருந்தன.

எம்மையும் விடுதலைப்புலிகளையும் பற்றிப் பேசும் தகுதி சுமந்திரனுக்குக் கிடையாது – என்றார்.

## எஸ்.ரி.எவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட அதிரடிப் படையினர் 24 பேர், மூன்று பொலிஸார், மூன்று ஊடகவியலாளர்கள் மற்றும் 7 பொதுமக்கள் ஆகியோரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியாவசிய சேவைகளை தடையின்றி தொடர்வதற்காகவும் இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. பொதுசனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி இந்த அவசர காலச் சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தி உள்ளார்.

# அரசுக்கு எதிரான எழுச்சிப் போராட்டங்கள் அரசியல் தலையீடின்றி நடைபெறல்வேண்டும்!

## ருவான் விஜேவர்தன தெரிவிப்பு



நெருக்கடிகளுக்கு உள்ளாகும் செயற்பாடுகளுக்கு எதிரான மக்கள் எழுச்சி போராட்டங்களில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன வலியுறுத்தியுள்ளார்.

13 மணித்தியாலங்கள் மின் விநியோகம் துண்டிக்கப்படுகின்றமை, எரிபொருள் வரிசை, சமையல் எரிவாயு வரிசை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் எழுந்துள்ள எழுச்சி போராட்டங்கள், அரசியல் தலையீடுகள் இன்றி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாளை (ஞாயிற்றுக்கிழமை) நாடளாவிய ரீதியில் இளைஞர்களால் சுயமாக முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:–

மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல், அவர்களை மேலும் மேலும் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கும் அரசு அதனை நியாயப்படுத்துவதற்காக முன்னெடுக்கும் செயற்பாடுகளால் மக்கள் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதன் காரணமாக கிராமபுறங்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு செல்லும் அரசியல்வாதிகளை தூற்றியனுப்பும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மறுபுறம் எதிர்க்கட்சி அதன் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்கவில்லை என்ற நிலைப்பாடும் மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே வரிசைகளில் காத்திருக்கும் மக்கள் திடீரென வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு சிறந்த உதாரணமாக பண்டாரவல பகுதியில் கடந்த புதனன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமாகும். விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அப் பகுதிக்கு வருகின்றனர் எனத் தகவல் அறிந்த மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் தற்போது 13 மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. இதே நிலைமை தொடருமாயின் மக்கள் மன உளைச்சலுக்கு மத்தியிலேயே வாழ வேண்டியேற்படும். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இலட்சினையுடனான வாகனத்தில் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்களை இந்த மன உளைச்சலில் இருந்து மீட்பதற்குள்ள ஒரேயொரு வழிமுறை வீதிக்கு இறங்கி போராடுவது மாத்திரமேயாகும்.

அவை தற்போது ஒவ்வொரு இடங்களிலும் சுயமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனைச் செய்வதற்கு மக்களுக்கு இடமளிக்க வேண்டும். அரசியல்வாதிகள் இவற்றில் தலையிடக் கூடாது. மக்களின் போராட்டங்களில் தலையிட்டு அவர்களது கோரிக்கைகளை சிதைத்து விட வேண்டாம் என்று அனைத்து அரசியல்வாதிகளிடமும் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசியல்வாதிகள் என்ற ரீதியில் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளை மாத்திரமே எம்மால் முன்வைக்க முடியும். அப்போது மக்கள் சரியான தீர்வு யாருடையது என்பதைத் தேர்ந்தெடுப்பார்கள். அவ்வாறன்றி மக்களின் எழுச்சி போராட்டங்களை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம்.

இந்தப் போராட்டங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்படுபவர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறும் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். மக்கள் போராட்டம் புத்திசாலித்தனமாகவும், உரிய உள்நோக்கத்துடனும் நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். – என்றார்.

# வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழர்களுக்கு உணவளிக்க தயார்!

## மோடியிடம் அனுமதி கோருகின்றார் ஸ்டாலின்



கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை அனுப்ப அனுமதிக்க வேண்டும் என்று பிரதமரிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்றத்தில் உள்ள அலுவலகத்தில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

அப்போது 14 கோரிக்கைகள் அடங்கிய மனுவை அவர் பிரதமரிடம் வழங்கினார்.

அதில், இலங்கைத் தமிழர்கள் தொடர்பான கோரிக்கையும் அடங்கியிருந்தது.

இலங்கையில் வசிக்கும் ஈழத் தமிழர்களுக்கு சம உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் உள்ளன. 1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலை காரணமாகத் தமிழகத்துக்கு வரும் ஈழத் தமிழர்களின் வருகை அதிகமாகியது.

அந்த வகையில் 1983 – 2012 ஆம் ஆண்டு வரை 3 லட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கையில் இருந்து அகதிகளாகத் தமிழகத்துக்கு வந்துள்ளனர்.

எனவே சம உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளைத் தமிழர்களுக்கு உறுதி செய்வதற்கு இலங்கை அரசை இந்திய அரசு அவுறுத்த வேண்டும்.

இலங்கையில் தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. எனவே இலங்கையில் உள்ள தமிழர்கள் பலர் தமிழகத்துக்கு கடல் மார்க்கமாக வந்து கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் 3 ஆண்கள், 5 பெண்கள், 7 குழந்தைகள், 4 மாத கைக்குழந்தை என 16 பேர் தமிழக கடலோரத்தை வந்தடைந்தனர். – என்று தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை அசைக்கவே முடியாது

## தினேஸ் குணவர்தன இப்பவும் பீற்றல்

கொழும்பு, ஏப். 02

அரசின் பெரும்பான்மை பலத்தை அசைக்க முடியாது என கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசின் பெரும்பான்மை பலத்தை இல்லாமல் செய்வதாக வெளியிடப்படும் தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் அமைச்சுப் பதவிகளைக் குறைப் பதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டாது எனவும், வினைத்திறனாக செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ரணிலிடம் அரசு ஒருபோதும் கோரியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பிரதமர் பதவியை வகித்துள்ள அனுபவம் மிக்கவர் எனவும் அவரது கருத்துக்களுக்கு செவி சாய்க்கப்பட்டாலும் பதவி வழங்கப்படாது என தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு நபர்கள் மீது குற்றம் சுமத்துவதை விடவும், இயற்கை மீதே குற்றம் சுமத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் காரணமாக ஒட்டுமொத்த உலகமே நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# வெள்ளவத்தையில் பிரபல நாணயமாற்று நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் இரத்து

வெளிநாட்டு நாணயமாற்றுச்சட்டத்துக்கு முரணான வகையில் உயர்வான நாணயமாற்று வீதத்தை அடிப்படையாகக்கொண்டு கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபட்டமையின் காரணமாக வெள்ளவத்தை பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் நாணயமாற்று நிறுவனமொன்றின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

வரையறுக்கப்பட்ட இந்த நாணயமாற்று நிறுவனம் உயர்வான நாணயமாற்றுவீதத்தைப் பேணுவதாகப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து, இது தொடர்பாக மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயமாற்றுப்பிரிவு கடந்த புதன்கிழமை விசாரணைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசாரணைகளின் மூலம் அந்த நாணயமாற்று நிறுவனம் உயர்வான நாணயமாற்று வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துவந்தமையும், வாடிக்கையாளர்களிடமிருந்து உயர்வான வீதத்திற்கு வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

உரிமம்பெற்ற வங்கிகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நாணயமாற்று வீதத்தை விடவும் உயர்வான வீதத்துக்குக் கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்வதானது 2017 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வெளிநாட்டு நாணயமாற்றுச்சட்டத்தின்கீழ் அனுமதிபெற்ற நாணயமாற்று நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை மீறும் செயலாகும்.

எனவே வெளிநாட்டு நாணயமாற்றுச்சட்டத்தின்கீழ் அந்தத் தனியார் நாணயமாற்று நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்தை கடந்த வியாழக்கிழமை நடைமுறைக்குவரும் வகையில் தற்காலிகமாக இரத்துச்செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, அந்த நிறுவனம் இனிவருங்காலங்களில் அனுமதியளிக்கப்பட்ட நாணயமாற்று நிறுவனமாகக் கருதப்படமாட்டாது என்பதை மக்களுக்கு அறியத் தருகின்றோம். அதன் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்டிருக்கும் காலப்பகுதியில் அந்நிறுவனத்துடன் ஏதேனும் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுவதானது சட்டத்துக்கு முரணான நடவடிக்கையாகக் கருதப்படும்.

அதேவேளை வெளிநாட்டு நாணயமாற்றுச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு முரணாகச் செயற்படும் நாணயமாற்று நிறுவனங்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்வதற்கோ அல்லது மீள்பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கோ மத்திய வங்கி தயாராக இருக்கின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2022இல் வெளியிடப்பெற்றது.